Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC . No.584/2023

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –7

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியராஜ் நேசன் | Calling: | மருத்துவர் |
| Husband's/ Father's Name: | நீதிநேசன் | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 53 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 17.04.2026 நேரம் : 02.45 PM

( எதிரி ஆஜர்.)

அ.சா. 7 முதன்மை விசாரணை

நான் கடந்த 2021 ம் வருடம் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக இருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது நான் சொந்தமாக கண் மருத்துவமனை வைத்து மருத்துவம் பார்த்து வருகிறேன். கடந்த 25.04.2017 ம் தேதி இரவு 08.00 மணிக்கு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 20வயது மதிக்கத்தக்க விஜயகுமார் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். விசாரித்தபோது அவரை அடையாளம் தெரிந்த மூன்று ஆண் நபர்கள் இரவு சுமார் 07.45 மணியளவில் பொன்னியம்மன் கோவில்அருகே கைகள் மற்றும் கட்டைகளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது இடது தோள்பட்டையில் தொடு வலியும், இடது மூக்கில் இரத்தம் வழிந்து காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய விஜய்யின் காயச்சான்றிதழ்**

**அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

பொதுவாக கரடு முரடான சாலையில் தவறிவிழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயத்தின் வயதுக்குறித்து நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காயத்தின் திசைகள் பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். போலிசார் என்னிடம் கருத்துரை வாங்கும்போது மரக்கட்டையை காண்பித்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சத்தியராஜ் நேசன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.04.17 16:07:09 +0530